# சினைமாடுகள் பராமரிப்பு

சினைமாடுகள் பராமரிப்பு என்பது கருவூட்டல் செய்த நாளிலிருந்து கன்று ஈனும் நாள் வரை உள்ள காலகட்டத்தை கொண்டதாகும். கருவூட்டல் செய்த நாளிலிருந்து 18-21 நாள் இடைவெளியில் மாடு அல்லது கிடேரி சினைப்பருவத்திற்கு வரவில்லையென்றால் கால்நடை மருத்துவரைக் கொண்டு 80-90 நாட்களுக்குள் சினையை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

## தீவன வேளாண்மை

கன்றின் வளர்ச்சி தாயின் கருவறையில் இருக்கும்பொழுதே தொடங்குகிறது. ஏழாவது மாதத்திலிருந்து கன்றின் வளர்ச்சி துரிதமடைவதால் தீவனத் தேவை அதிகரிக்கிறது. ஆகவே சினை மாடுகளுக்கு ஏற்கனவே அளிக்கும் தீவனங்களுடன் 1 ½ கிலோ கூடுதலாக அடர்தீவனமும், 15-20 கிலோ பசுந்தீவனமும், 5 கிலோ உலர்த்தீவனமும் அளிக்க வேண்டும். மேலும் கன்று ஈனுவதற்கு மூன்று நாட்கள் முன்பு மலச்சிக்கலை தவிர்க்க தவிடு சற்று அதிகம் கொடுக்கலாம். பசுந்தீவனத்தின் மூலம் வைட்டமின் ஏ சத்து கிடைக்கிறது. இச்சத்து பசுக்களின் கருப்பை மற்றும் பிறப்புறுப்புக் கூறுகளின் திசு வளர்ச்சிக்கும், நஞ்சுக் கொடியின் வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகும்.

## சினைமாடுகளுக்கு தாது உப்புக்கலவையின் முக்கியத்துவம்

கால்நடைகளின் உடல்வளர்ச்சி இனப்பெருக்கம் மற்றும் உடல் ஆரோக்கியத்துக்கு 25 தாதுக்கள் தேவைப்படுகிறது. இவை கறவைமாடுகளின் உடல் வளர்ச்சிக்கும், பால் உற்பத்திக்கும், சினை காலத்தில் கன்று வளர்ச்சிக்கும் தேவைப்படுகின்றன. சினைகாலத்தில் அளிக்கப்படும் தாது உப்புகள் மீதி இருப்பின் அவைகள் கால்நடைகளின் உடலில் சேமித்து வைக்கப்பட்டு கன்று ஈன்றபின்னர் பால் உற்பத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

## தாது உப்பு பற்றாக்குறை நோய்கள்

| | |
|---|---|
| கால்சியம் | நஞ்சுக்கொடி தங்குதல், கருப்பை வெளித்தள்ளுதல் |
| பாஸ்பரஸ் | இனப்பெருக்கக் குறைபாடு, இரத்தச்சோகை |
| தாமிரம் | கருத்தங்காமை, சினைப்பருவமின்மை |
| கோபால்ட் | குறைபிரசவம் |
| மாங்கனீசு | கன்றுகளில் பிறவிக்குறைபாடுகள் |
| துத்தநாகம் | இனப்பெருக்க குறைபாடு, விந்து உற்பத்தி குறைவு |
| அயோடின் | கருச்சிதைவு. கன்றுகள் இறந்து பிறத்தல் |
| செலினியம் | இனப்பெருக்க குறைபாடு, நஞ்சுக்கொடி தங்குதல் |

நாள் ஒன்றுக்கு 10 லிட்டர் கறக்கும் 400 கிலோ எடையுள்ள பசு மாட்டிற்கு 47 கிராம் கால்சியம் மற்றும் 35 கிராம் பாஸ்பரஸ் தேவை. கலப்புத் தீவனம் தயாரிக்கும்போது தாது உப்புகளை 2 விழுக்காடு சேர்த்துக் கொண்டால் தனியாக அளிக்கத் தேவையில்லை.

**கொடுக்கும் அளவு (நாள் ஒன்றுக்கு)**

| | |
|---|---|
| கன்றுகள் | 5 கிராம் |
| கிடேரிகள் | 20 கிராம் |
| சினை பசு/எருமைகள் | 40 கிராம் |
| பால் கறக்கும் பசு | 50 கிராம் |

**கொட்டில் அமைப்பு**

சினை மாடுகளுக்கு இடவசதியும், தரை அமைப்பும் முக்கியமாக பராமரிக்கப்பட வேண்டும். ஏழாவது மாத சினைக் காலத்திலிருந்து கன்றுகள் ஈனல் நிலைக்கு ஏற்றவாறு தன்னுடைய உடலமைப்பை மெல்ல மலத் துவங்கும். இந்த காலகட்டத்தில் மாடுகள் வழுக்கி ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. சில சமயங்களில் கன்று இறப்பு நேரிடுவதும் உண்டு. மேலும் எலும்பு முறிவும் ஏற்படலாம். ஆகவே கொட்டில் தரையினை எப்பொழுதும் வழுக்கல்லில் இருக்கும் விதத்தில் பாசி மற்றும் சாணப்பற்று இல்லாமல் சுத்தமாக வைத்துக் கொள்வது அவசியம். இந்த சமயத்தில் மற்ற மாடுகளுடன் சேர்த்து கட்டி வைத்தாலோ, மேய்ச்சலுக்கு விட்டாலோ, பருவத்திலுள்ள மற்ற மாடுகள் இதன் மீது தாவுவதற்கும், ஒன்றோடு ஒன்று முட்டிக்கொண்டு சிறு விபத்துக்கள் நிகழ்வதற்கும் வாய்ப்புகள் உண்டு. அதனால் ஏழு மாத காலத்திலிருந்தே சினை மாடுகளைப் பிரித்து வேறு நல்ல காற்றோட்ட வசதியுடன் கூடிய சுத்தமான கொட்டில்களில் பராமரிக்கலாம். இவ்வாறு செய்வதன் மூலம் சினை மாடுகளுக்கென்று சிறப்புப் பராமரிப்பு முறைகளைக் கையாளுவது சுலபமாகின்றது.

**கன்று ஈனும் காலம்**

கன்று ஈனுவதற்கு 7 முதல் 10 நாட்களுக்கு முன்பு இடுப்பு மற்றும் அதனை சுற்றியுள்ள சார்ந்த எலும்புகள் தளர்ந்து காணப்படும். இதனை தட்டு உடைதல் என்பர். மேலும் கன்று ஈனும் நாள் நெருங்க நெருங்க பால் காம்புகள் விரைத்து பால் சுரப்பு மெழுகு போல் காணப்படும். கன்று ஈனுவதற்கு இரு நாட்கள் இருக்கும்பொழுது கருவறை வாயிலிருந்து கெட்டியான சளி போன்ற திரவம் தாரையாக வழியத் தொடங்கும். கன்று ஈனும் நேரம் நெருங்கும் பொழுது மாடுகள் அடிக்கடி படுத்து எழுந்திருக்கும் கிடேரிகள் வலியினால் வயிற்றுப் பகுதியை உதைத்துக் கொள்ளும். இந்த அறிகுறிகள் தெரியத் துவங்கியவுடன் மற்ற சினை மாடுகளிலிருந்து இதனைப் பிரித்து கண்காணிக்க வேண்டும். தரையில் சுத்தமான வைக்கோலைப் பரப்பி மாட்டிற்கும், கன்றுக்கும் இதமான சூழ்நிலையை அமைத்து கொடுத்து கன்று ஈனுதல் அமைதியாக நிகழ வழி வகுக்க வேண்டும்.

**சினை மாடுளுக்கு முக்கிய சில பராமரிப்பு முறைகள்**

- கறவை மாடுகளின் சினைக்காலம் 280 நாட்களாகும். எருமைகளுக்கும் 310 நாட்கள் ஆகும். 10 நாட்கள் முன்பின் இருக்கலாம்
- சினைக்காலத்தின் கடைசி 2 மாதங்களில் வழுக்கும் தரையிலோ அல்லது கூட்ட நெரிசலிலோ செல்ல அனுமதிக்கக் கூடாது.
- சினை மாடுகளுக்கு அனைத்து சத்துக்களும் அடங்கிய தீவனங்களை அளிக்க வேண்டும். ஒவ்வொரு சினை மாடு/கிடேரிகளுக்கும் தினசரி தீவனங்களுடன் அதிகமாக 1 கிலோ அடர் தீவனம் 7 மாதத்திலிருந்து அளிக்க வேண்டும். கன்று ஈனும் 2 மாதம் முன் 1.5 கிலோவும், 3 நாட்கள் முன் 4-5 கிலோ அடர் தீவனமும் அளிக்க வேண்டும்.
- கன்று ஈனுவதற்கு 50-60 நாட்கள் முன்பு பால் கறவையை நிறுத்திவிட வேண்டும். அப்பொழுது தான் அடுத்த கறவையில் பால் உற்பத்தி சிறப்பாக இருக்கும்.
- சினை மாடுகளுக்கு கடுமையான உடற்பயிற்சியோ, வேலைகளோ செய்ய அனுமதிக்கக்கூடாது. இவ்வாறு செய்வதால் பால் அளவும், பாலில் கொழுப்பின் விழுக்காடும் அதிகரிக்கும்
- அதிக தூரங்கள் நடக்கவிடுவது, ஓடவிடுவது, பயப்பட செய்வது மற்றும் சண்டை போடுவது போன்றவற்றை அனுமதிக்கக்கூடாது.
- எல்லா சினை மாடுகளையும் 7-10 நாட்களுக்கு முன்பு பிரித்து தனியான அறையில் வைத்து பராமரிக்க வேண்டும்.
- கன்று ஈனும் அறை சுத்தமாகவும், ஈரமில்லாமலும், சுகாதாரமாகவும் தேவையான இடவசதியுடனும் இருக்க வேண்டும்
- கன்று ஈனும் முன்பு அதிக பால் கொடுக்கும் மாடுகளின் மடி மற்றும் காம்புகள் பெரியதாக இருக்கும். சில மாடுகளில் கன்று ஈனும் சிறிது நேரம் முன்பு பல் ஒழுக ஆரம்பிக்கும். அச்சமயத்தில் பாலை கறந்து வைத்து பிறந்த கன்றுக்கு கொடுக்கலாம்
- கிடேரிகள் கன்று ஈனும் ஒரு மாதம் முன்பிலிருந்து மடியை ஒரு நாளைக்கு இருமுறை 5 நிமிடங்கள் தேய்த்து விட வேண்டும். இவ்வாறு செய்வதால் மடி சற்று பெரிதாகி 10-15 விழுக்காடு அதிக பால் உற்பத்தி ஏதுவாகும்.